RESEARCH ARTICLE

Asian Research Association

INDIAN JOURNAL OF
MULTILINGUAL RESEARCH AND DEVELOPMENT

DOI: 10.54392/ijmrd223S111

# Changes in Life Brought About by Education in the Social Environment

## சமூகச் சூழலில் கல்வியால் நிகழ்ந்த வாழ்வியல் மாற்றங்கள்

**G. Sangeetha [a,*]**

[a] Mahalakshmi Matriculation School, Paruthippattu, Chennai-600071, Tamil Nadu, India.

*Corresponding author Email: sangeetham9442@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijmrd223S111

Received: 13-04-2022; Revised: 05-07-2022; Accepted: 09-07-2022; Published: 19-08-2022

**Abstract:** Education changes itself in every situation with time. "Change is the only thing that never changes." The study clarifies how education has positioned itself on the path of development from its early days to the present day? the functions of education in bringing women to the path of development, the contribution of wealth in bringing education to all, and how man becomes a person of great power if education is the characteristic of a man. The ability to observe is closer to the state of mind of today's students the methods of bringing education into the palms of children with the help of technology and the benefits of education can be learned through this article.

**Keywords:** Education, Development, Contribution, Technology

**Language:** **Tamil**

### முன்னுரை

கல்வி அண்டவெளியை காட்டிலும் பிரம்மாண்டமானது. கடலைக் காட்டிலும் ஆழமானது, தேனீயின் சுறுசுறுப்பும், காக்கையின் ஒற்றுமையும், நாயினுடைய நன்றியுணர்வும், சூரியனின் வெப்பமும், நிலவின் குளிர்ச்சியும், அருவியின் வழிபாதையும், அடித்த சிறிது நேரத்திற்கெல்லாம் அதை மறந்து சிரிக்கும் குழந்தையும், நமக்கு ஏதோ ஒன்றை கற்றுக் கொடுத்துக் கொண்டே இருக்கிறது. இதைத்தான் அறிவில் முதிர்ந்த அவ்வைப் பாட்டி "கற்றது கையளவு கல்லாதது உலகளவு" என ஆணித்தரமாக என்றோ சொல்லி வைத்துவிட்டுச் சென்றுள்ளார். இக்கட்டுரையில் கல்வியை கீழ்காணும் தலைப்புகளில் ஆராய்வோம்.

### கல்வியின் தன்மை

கல்வி கற்கும்போது நுனி கரும்பை போல கசப்பாகி கற்றபின் அதுவே அடிக்கரும்பை போல இனிப்பாகி சிறந்திடும். எவ்வளவு நிதர்சனமான பார்வை, கற்றோருக்கு சென்ற இடமெல்லாம் பெருமையே. அள்ள அள்ள குறையாத செல்வம் கல்வி, கொடுக்க கொடுக்க அட்சய பாத்திரத்தில் சுரக்கும் பொருட்களைப் போல பெருகி நிறையும் கல்வி என்னும் அமுத சுரபி. யாராலும் கவர முடியாத நிலைத்திடும் செல்வம் கல்வி. ஏழு தலைமுறைகளும் கற்றோரை கொண்டாட மறப்பதில்லை. கல்வி கடலில் மூழ்க மூழ்க விலையில்லா முத்துக்களை நாம் அணிந்து வரலாம். கல்வி கற்க வயது ஒரு தடை இல்லை, கருவில் உதித்த முதற்கொண்டு கல்வி கற்கலாம் என்பதற்கு உதாரணம் புராணக்கால பக்த பிரகலாதன் கதையை முதற்கொண்டு நவீன கால ஆராய்ச்சி வரை அடுக்கிக் கொண்டே போகலாம். ஆர்வத்தினை மட்டுமே மூலதனமாகக் கொண்டு கல்வி கற்க தொடங்கலாம்.

## இலக்கியத்தில் கல்வி

"தொடங்குங்கால் துன்பமாய் இன்பம் பயக்கும்

மடம் கொன்று அறிவு அகற்றும் கல்வி -குமர குருபரர்"

கல்வி தொடக்கத்தில் துன்பமாகவும் முடிந்தபின் இன்பமாகவும் இருக்கும் என்பதை அழகாகக் கூறுகிறார்.

அறியாமையை கல்வி அகற்றுகிறது என்பதனை நான்மணிக்கடிகை இவ்வாறு கூறுகிறது "கற்பக் கழிமடம் அஃகும்". அறம், பொருள், இன்பம், வீடு இவற்றை கல்வி அழகாய் தருகின்றது என்பதை நீதிநெறி இவ்வாறு விளக்கிச் சொல்கிறது.

"அறம் பொருள் இன்பம் வீடு பயக்கும்

புறங்கடை நல்இசையும் நாட்டும்

உறும் கவல் ஒன்று

உற்றுழியும் கைகொடுக்கும் கல்வியின்

ஊங்கு இல்லை,

சிற்றுயிர்க்கு உற்ற துணை"

குமரகுருபரர் கூற்றுப்படி கல்வி கற்றவர்கள் மேலே கண்ட நால் வகைப் பயனைப் பெறுவதுடன் உலகில் நல்ல புகழையும் அடைவார்கள். அதுமட்டுமின்றி மனிதனுக்கு கல்வியை தவிர வேறு எதுவுமே சிறந்த துணையாக இருக்க முடியாது.

## வள்ளுவனின் பார்வையில் கல்வி

திருவள்ளுவர் கல்வி என்னும் தலைப்பில் அதிகாரம் நாற்பதில் முத்து முத்தாக பத்து குறட்பாக்களை உலகத்தாருக்கு கொடுத்துச் சென்றுள்ளார். ஒவ்வொரு குறளும் ஓராயிரம் சிறப்புகளைக் கல்விக்காக இங்கே தாங்கி நிற்கின்றது. பத்து குறட்பாக்களில் என்னை மிகவும் பாதித்த ஒரு குரலை மட்டும் இங்கே பதிவு செய்கின்றேன்.

"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்

கற்றனைத் தூறும் அறிவு" (Parimelalhagar, 2012)

குறலை முன்னெடுக்க காரணம் கற்றலின் கேட்டல் நன்று என்ற முதுமொழிக்கு ஏற்ப என்னுடைய ஏழாம் வகுப்பு ஆசிரியர் திரு ஏழுமலை அவர்கள், ஓலைக் கொட்டகையில் மண்தரையில் நாங்கள் அரசாங்க பள்ளியில் அமர்ந்திருக்க, அவர் இக்குறளை எங்களுக்கு பாடம் நடத்தியது என்றும் என்னுடைய மனதில் பசுமரத்தாணி போல நிலைத்து நிற்கின்றது. மணற்கேணி - இவ்வார்த்தையே இன்று வழக்கொழிந்து போய்விட்டது. கிணறு என்று பலராலும் அறியப்பட்டாலும், அந்த கிணறை தொலைக்காட்சி வாயிலாக மட்டுமே பார்க்கும் அவல நிலைக்கு நம் தலைமுறை தள்ளிவிடப்பட்டு இருக்கின்றது, என்பதை மறுக்க இயலாது. ஊற்று நீர் எடுக்க விரும்புவோர் மிக ஆழமாகத் தோண்ட தோண்ட உயிரை குளிரச் செய்யும் இனிய தண்ணீர் நிறைய கிடைக்கும் அந்த தண்ணீரை நாம் எடுத்துப் பயன்படுத்திக்கொள்ள அது சேர்ந்துகொண்டே இருக்கும், அதுபோல ஒருவன் கற்ற கல்வியானது பயன்படுத்த பயன்படுத்த பெருகிக் கொண்டுவரும். அறிவும் மேலும் மேலும் வளம் பெறும். கல்வி கற்க முற்றுப்புள்ளி கிடையாது, நீங்கள் எவ்வளவு பெரியவர்கள் ஆனாலும் படித்துக் கொண்டே இருக்கவேண்டும் என்று எங்கள் தமிழய்யா இப்படி சொல்லி முடிக்கையில் எங்கள் மனம் கல்வியின் பால் கரைந்து கொண்டு இருந்ததை உணரமுடிந்தது கல்வியின் சிறப்பை அறிந்து சொல்ல முடியாது எத்தனை தலைப்புகளை நாம் எடுத்து அதனை பிரித்து, ஆராய்ந்து, புகழ்ந்து, அலசி, வர்ணித்து, போற்றி பாடினாலும் ஐயன் வள்ளுவனைத் தொட்டு தொடராமல் இருக்க முடியாது.

## பெண்கல்வி

பெண்கள் உலகத்தின் விடிவெள்ளி. அவளின் பாதுகாப்பில், வளர்ப்பில் மட்டுமே இவ்வுலகம் உயிர்ப்புடன் விளங்குகிறது. அப்படிப்பட்ட பெண் கல்வி அறிவு பெற்று தன்னம்பிக்கையுடன் திகழ்வதில் தான் இவ்வுலகின் வளர்ச்சி இருக்கின்றது.

“பெண்கள் கல்வியறிவு பெற்ற சமூகம்

முன்னேறும் அங்கே ஆண்-பெண்

சமத்துவம் உண்டாகும்”

வீடு பெண்ணுக்கு என்றும், வெளி உலகு ஆணுக்கு என்றும் தீர்மானிக்கப்பட்ட வேலை பிரிவிலேயே பெண் கல்விக்கான தடை ஆரம்பித்துவிட்டது (Nagarajan, 2001). அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்பது பெண்களின் அரண்களாக இருந்தாலும், கல்வி மட்டுமே பெண்களின் உயிர் மூச்சாக திகழவேண்டும். அடுப்பூதும் பெண்ணுக்கு கல்வி எதற்கு? என்ற கேள்விக்கு பல பெண்களின் சாதனை பட்டியலே பதிலாக அமையும். ஆயினும் அந்த சாதனை போதுமானதாக இல்லை.

மக்கள் தொகையில் ஒரு பாதி இருக்கும் பெண்களை அடிமையாக நடத்தும் எந்த ஒரு நாடும் உயர்வு பெற்றதில்லை. மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம். பெண்கள் கல்வி கற்றால் மட்டுமே இந்த சமுதாயம் சீர்படும். ஓர் ஆணை படிக்க வைத்தால் அவன் மட்டுமே முன்னேறுவான் ஒரு பெண்ணை படிக்க வைத்தால் அந்த குடும்பமே முன்னேறும் என்றார் ஈ.வே. ராமசாமி. மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டும் அம்மா என்று கவிமணி தேசிக விநாயகம் பாடியதில் இருந்து பெண்மையின் முக்கியத்துவத்தை அறியலாம். இன்று படித்த பெண்கள் சமுதாயத்தில் தலை நிமிர்ந்து நிற்கின்றனர் பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம் என்ற பாரதியின் கனவு மெய்ப்பட ஆரம்பித்துள்ளது பெண் குலத்தின் பெருமை தற்போது பெண்கள் கல்வி அறிவு பெற்று ஆட்சி துறை, தொழில்துறை, அறிவியல், மருத்துவம், சட்டம், காவல், இலக்கியம், கல்வி போன்ற துறைகளில் சிறப்பாக பணியாற்றி வெற்றி நடை போடுவதை நம்மால் காணமுடிகிறது.

## கல்வியை எப்படி கற்க வேண்டும்

கல்வி ஒரு அழகான சினிமா போன்றது. திரையரங்கில் நுழையும் ஒவ்வொருவரின் மனநிலையும், எப்படி அந்தப் படத்தில் மட்டுமே லயித்து இருக்கின்றதோ, மாணவர்களும் கல்வி கற்கும்போது அப்பாடத்தில் இரண்டறக் கலந்து அக்கம்பக்கம் மறந்து, கல்வி போதிப்பவரின் வார்த்தைகளுக்கு அப்படியே மதி மயங்கி, உலகம் முழுவதும் பிரகாசமாகி, கல்வியில் மூழ்கி, ரசித்து கற்க வேண்டும். அப்போதுதான் திரையரங்கை விட்டு வெளியே வந்தவுடன் படம் முழுவதும் நம் நினைவில் அப்படியே பதிந்து விடுகின்றது. நம்முடைய நண்பர்களுக்கும், அப்படத்தை அப்படியே கதையாக கூறுகின்றோம். நம்முடைய கற்பனை சக்தியும், ஞாபகசக்தியும் பலமடங்கு பெருகி நம்மையும் அதை கேட்பவர்களையும் பரவசம் அடைய செய்கின்றது. மாணவர்களும் அதேபோல்தான் மிகுந்த ஆர்வத்தோடும் ஆசையோடும் திரைப்படத்தைப் பார்ப்பது போல் பாடங்களை பார்த்தீர்களானால் நீங்கள் கல்வியை முழுமையாக கற்க முடியும் (Nagarajan, 2001).

## கல்வி கற்க செல்வம் ஒரு தடையா?

“பிச்சை புகினும் கற்கை நன்றே” என்று ஒரு முதுமொழி, ஆழமான முதுமொழி (Venkatasamy Nattar, 2018).

“ஏற்பது இகழ்ச்சி” என்ற அவ்வையின் முதுமொழி அனைவரும் பின்பற்ற வேண்டிய வாழ்வியல் நெறிமுறைகளில் ஒன்று, அப்படி இருக்க முதலில் சொன்ன முதுமொழி தவறா?

இல்லவே இல்லை. கல்வியைக் கற்க அவர் மட்டுமே பயன் பெறப் போவதில்லை. தான் கற்ற கல்வி உலகம் முழுமைக்கும் பயன் தருவதாக உள்ளது. எனவே, கல்வியை நீக்கமற கற்க வேண்டும், என்று நினைப்பவர்களுக்கு, செல்வம் எப்போதும் ஒரு தடையாக இருப்பதில்லை. ஆகவே, கல்வியை

கற்று உலகப் பொது உடமையுடன் வாழ பல்வேறு உதவித் தொகையுடன் கூடிய கல்வி திட்டங்களும், அறக்கட்டளைகளும், செல்வந்தர்களும் தயார் நிலையில் உள்ளனர் என்பதை யாராலும் மறுக்க முடியாது (Venkatasamy Nattar, 2018).

## தற்கால கல்வி முறை

"மாற்றம் ஒன்றே மாறாதது" தற்கால கல்வி முறையை பல்வேறு படி நிலைகளில் நாம் ஆராய்ந்து பார்க்க முடியும். உள்ளங்கையில் அனைவரும் கைபேசி வாயிலாக உலகை அடக்கி வைத்துள்ளனர். கேட்டு கேட்டு படிக்கும் முறைகள் எல்லாம் மாறி, இன்று இணையம் வழியாக பார்த்து பார்த்து கல்வியைக் கற்கும் நடைமுறைக்கு நாம் பழகி கொண்டிருக்கின்றோம். ஆம், கொரோனா ஊரடங்கு காலத்தில் குழந்தைகள் கணினி வழியாகவும், கைபேசி வழியாகவும் இன்று மாணவர்கள் தங்களுடைய கல்வி பயணத்தை தொடர்ந்து கொண்டிருக்கின்றனர். இதுவும் நல்ல பலனைத் தந்து கொண்டுதான் இருக்கின்றது. ஏனென்றால் இரண்டு வருடமாக "சங்கீதா தமிழ் டீச்சர்" என்ற யூ டியுப் வழியாக நான் பாடம் நடத்திக் கொண்டிருக்கிறேன். 700க்கும் அதிகமான வீடியோக்கள், ஒரு கோடிக்கும் அதிகமான பார்வையாளர்களை கொண்டு, தமிழை கற்று தந்து கொண்டிருக்கின்றேன். கல்வியின் புதிய பரிமாணம் இது.

## கல்வியின் பயன்

நாட்டின் வளர்ச்சிப் பாதையை கல்வி மட்டுமே நிர்ணயிக்கும். தொலைநோக்குச் சிந்தனையை வளரச் செய்து உலகத்தை புதிய பாதைக்கு கொண்டு செல்லும் வல்லமை தருகிறது. ஏட்டுக்கல்வி மட்டுமே ஏற்புடையது அல்ல, நமக்கு புதிய அனுபவத்தை கொடுக்கும் ஒவ்வொரு நிகழ்வும் கல்வி முறையே. சொத்து, சுகம், பணம், பந்தம், நட்பு என்று எது கை விட்டாலும், நீங்கள் கற்ற கல்வி எந்த காலத்திலும் கைவிடாது. கல்வி மனிதனை முழுமை அடையச் செய்கிறது. அறியாமையில் இருந்து விலகுவது அல்லது விளக்குவது, இரண்டுமே கல்வியால் மட்டுமே நடைபெறக் கூடியது.

## முடிவுரை

"குரு இல்லாத வித்தை பாழ்" - இது நம்முடைய பாரம்பரியம். குரு மூலம் கற்கும் கல்வி ஏழு பிறவியிலும் நன்மை தருவதாகும். "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்ற அவ்வைப் பாட்டியின் மொழி என்றும் பொய்ப்பதில்லை. கல்வியின் நோக்கம் அறிவைத் தேடுவது ஆகும். கற்றவருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு. கல்வி என்பது மட்டுமே நிலைத்த செல்வம். காதலினால் மட்டுமே அல்ல, கல்வியினாலும் மனிதருக்கு இன்பம் உண்டு. நாம் அனைவரும் திருக்குறளுக்கு ஏற்ப, கல்வி கற்று கண் உடையவர்களாக இருப்போம். கல்லாமையால் புண் உடையவர்களாக வேண்டாம். மனித குலம் முழுமைக்கும் கல்வியை கொண்டு சேர்ப்போம்.

## References

Nagarajan, K., (2001) Kalvi Ulaviyal, Ram Pathippagam, Chennai, India.

Parimelalhagar, (2002) Thirukural, Saradha Pathippagam, Chennai, India.

Venkatasamy Nattar, N.M., (2018) Avvaiyarin Moodhurai, Manivaasagar Pathippagam, Chennai, India.

## Funding

No funding was received for conducting this study.

## Conflict of interest

The Author has no conflict of interest to declare that they are relevant to the content of this article.

**About the License**

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

**Cite this Article**

G. Sangeetha, Changes in Life Brought About by Education in the Social Environment, Indian Journal of Multilingual Research and Development, Vol 3, Iss S-1 (2022) 54-58. DOI: https://doi.org/10.54392/ijmrd223S111